**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2014–15 ஆம் நிதியாண்டு– பார்வைத்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான ஒளிரும் மடக்கு குச்சிகள் வாங்கி வழங்கும் திட்டம்– திட்டத் தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.33

நாள்:04–07–2014
ஜய, ஆனி 20,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.92, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, நாள் 16–07–2012.
2. அரசாணை(நிலை) எண்.03, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 12–02–2014.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.4002/ இவாததி1/ 2014, நாள் 8.5.14 மற்றும் 11.6.14.

–––––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2012–13 ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் இரவில் சிரமமின்றி நடப்பதற்கு உதவியாக, 5000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ஒளிரும் மடக்கு குச்சிகளை, நடைமுறையில் உள்ள விதிகளை பின்பற்றி வாங்கி வழங்கிட ரூ.10.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014ம் நிதியாண்டில் பார்வை குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு ஒளிரும் மடக்கு குச்சிகள் வாங்கி வழங்கும் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.38,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு ஒளிரும் மடக்கு குச்சிகள் வாங்கி வழங்கும் திட்டம், பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாகவும், மேலும் இத்திட்டத்தினை தொடர் திட்டமாக செயல்படுத்தப்படும்பட்சத்தில், பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு பயனுள்ளதாக அமையும் என்று தெரிவித்து, 2014–15 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தினை தொடர் திட்டமாக செயல்படுத்திட அனுமதியும், மற்றும் ஒளிரும் மடக்கு குச்சிகள் ஒன்றின் விலை ரூ.250/– என்ற வீதத்தில் 1500 பயனாளிகளுக்கு, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி, திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்து வாங்கி வழங்கிட ரூ.3,75,000/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை நன்கு பரிசீலித்த அரசு அதனை ஏற்று, பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் இரவிலும் சிரமமின்றி நடப்பதற்கு உதவியாக இருக்கும்வகையில், பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு ஒளிரும் மடக்கு குச்சிகள் வழங்கும் திட்டத்தினை, 2014–15ம் நிதியாண்டில் ஒரு ஒளிரும் மடக்கு குச்சியின் விலை ரூ.250/– என்ற வீதத்தில் 1500 பயனாளிகளுக்கு, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி, திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்து, வாங்கி வழங்கிட ரூ.3,75,000/–ஐ (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை நடப்பு நிதியாண்டு 2014–15 ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டுக்குள் மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. ஒளிரும் மடக்கு குச்சிகள், உத்தேச செலவு தொகையைவிட விலை அதிகமிருப்பின், நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகைக்குள்ளும், விலை குறைவாக இருப்பின், அதற்கு தகுந்தாற்போல், ஒளிரும் மடக்கு குச்சிகளின் எண்ணிக்கையை அதிகரித்து வாங்கி வழங்கிடவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235– சமூக பாதுகாப்பும் நலனும் 02 சமூக நலன் 101– மாற்றுத் திறனாளிகள் நலன்– பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II மாநிலத் திட்டம் – CO – மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு திட்டம் –24 பொருட்களும் வழங்குதலும்".
(த.தொ.கு.2235–02–101–CO–2407)

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.34474/நிதி(சந)/2014, நாள் 01.07.14ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர்,சென்னை–18.

<u>நகல்:–</u>
நிதி (சந) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.